**செய்தி வெளியீடு எண் : 403** **நாள் : 01.03.2023**

## <u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி, மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா ஆகியோர் தொலைபேசி வாயிலாக பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் 70-வது பிறந்தநாளையொட்டி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தொலைபேசி வாயிலாக தொடர்புக் கொண்டு, தனது பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தார். பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா அவர்கள் தொலைபேசி வாயிலாக தொடர்புக் கொண்டு தனது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in